# மாநில சுயாட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 18.02.2026 ஆம் தேதி யன்று திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் மேனாள் மாநில திட்டக் குழுவின் தலைவர் முனைவர் மு.நாகநாதன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் முதல் பகுதி அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து அரியதொரு வரலாற்று சிறப்புமிக்க உரையை சட்டமன்றத்தில் பதிவிட்டார்.



மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர், நீதியரசர் ராஜமன்னார் குழு சமர்பித்த அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது ஆற்றிய உரைக்கு இணையாக மீண்டும் மாநில சுயாட்சி கொள்கையை முதல்வர் சட்டமன்றத்தில் வலியுறுத்தி பேசியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், பேரறிஞர் அண்ணா ஜனநாயக காவலர் பண்டிதர் நேரு காலத்தில் 1962 - 63 ஆம் ஆண்டில் மாநிலங்களவையில் ஆற்றிய உரை, திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் மாநில சுயாட்சியை வலியுறுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரைகளுக்கும், தற்சமயம் தலைவர் ஸ்டாலின் ஆற்றிய உரையின் காலங்கள் வெவ்வேறானவை. பண்டிதர் நேரு காலத்தில் இந்திய துணை கண்டம் பிரிவினையை கண்ட காலம், இந்தியா சுதந்திரம் அடைந்து பிரிவினையின் தாக்கத்திலிருந்து மீண்டு, மொழி வாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட காலம். காங்கிரஸ் கட்சி ஆட்சி ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்ததன் விளைவாக மாநில உரிமைகள் கோரிக்கைகளை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு சுயாட்சி கோரிக்கைகள் ஊறு விளைவிக்கும் என்று கருதினர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதல்வரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற பிறகு டெல்லி சென்று பிரதமர் இந்திரா அம்மையாரை சந்தித்து விட்டு 1969, மார்ச் 17 ஆம் நாள் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார், அப்போது அவர் கூறியது பின்வருமாறு;

“மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் அறியப்பட வேண்டும், மாநிலங்களுக்கு சுயாட்சி கிடைக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய நிலைப்பாடு எங்களுடைய தலைவர் அண்ணாவின் கனவும் அதுவே என்று கூறினார், தொடர்ந்து அவர் பேசுகையில் மாநில சுயாட்சி கோரிக்கை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிமுக்கியமான கொள்கை என்று தெளிவாக விளக்கினார், அதுமட்டுமல்ல மாநில சுயாட்சி குறித்து அறிந்து விரிவான அறிக்கையை வழங்கக்கூடிய அளவில் ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

1969 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 19 ஆம் நாள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த பி.வி.ராஜமன்னார் அவர்களின் தலைமையில், சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார், நீதிபதி பி. சந்திரா ரெட்டி ஆகியோர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழு 27.05.1971அன்று பல்வேறு தரப்பினரின் கருத்துகளை கேட்டு ஆராய்ந்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது.

ஏப்ரல் 16,1974இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு பின்வரும் தீர்மானத்தை சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்;

பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துகளை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது ” என்ற தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். இந்நிலையில் பிரதமர் இந்திரா நெருக்கடி நிலையை அமல்படுத்தி ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தார், அதில் மிக முக்கியமானது 42வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஆகும், அதன் அடிப்படையில் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றினார்.

பொதுமக்களின் போராட்டத்தின் விளைவாக நெருக்கடி நிலையை விலக்கி கொண்டு தேர்தலை சந்தித்தார், வெற்றியை இழந்தார், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனதா கட்சியினர் 44வது அரசமைப்புச் சட்ட திருத்தத்தை அமல்படுத்தினார்கள், இச்சட்டத் திருத்தத்தின் மூலம் 42 வது சட்டத் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட பல திருத்தங்களை ரத்துச் செய்து நிறைவேற்றினார்கள், ஆனாலும் 42 வது சட்ட திருத்தம் மூலம் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து ஒத்திசைவுக்கு பட்டியலுக்கு மாற்றப்பட்டதை மட்டும் ரத்து செய்யவில்லை. ஜனதா அரசு கல்வியை மாற்றிய பிரிவை மட்டும் இரத்து செய்யாமல் விட்டது, இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் காங்கிரஸின் அதிகார குவிப்பிற்கு இதர தேசியக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன என்பது தான். இதன் விளைவாகத் தான் “நீட்” தேர்வு. கல்வியில் ஒன்றிய அரசு அளவற்ற ஆதிக்கத்தை பயன்படுத்தி மாநில அரசின் அதிகாரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையை மாற்றத்தான் உண்மையான கூட்டாட்சிக்காக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இடைவிடாது ஒன்றிய - மாநில அரசு உறவுகளை மாற்றியமைக்க சட்டதிருத்ததை கொண்டுவர முயற்சி செய்கிறது, அதன் விளைவாக 1983 ஆம் ஆண்டில் நீதிபதி சர்காரியா அவர்களின் தலைமையில் “மத்திய - மாநில உறவுகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது, 2000 ஆம் ஆண்டில் நீதியரசர் வெங்கடாசலையா ஆணையம், 2004 ஆம் ஆண்டில் நீதியரசர் பூஞ்சி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணையங்கள் வழங்கிய அறிக்கைகளை ஆராயந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மேலும் மாநில உரிமைகள் பறிப்பும், ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்பும் தொடர்கதையாகி உள்ளது.

**சி.சேரன்**
சென்னை மேற்கு மாவட்ட
தலைமைச் செயற்குழு உறுப்பினர்.
செயலர்
இனமானப் பேராசிரியர் நற்றமிழ்த்
தொண்டகம்



2014ல் ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. ஆட்சி, மாநிலங்களின் உரிமைகளை மேலும் பறித்து வருகின்றனர், இந்தியாவில் ஏற்கனவே நிலவும் அரைகுறைக் கூட்டாட்சியும் அழிக்கப்பட்டு, ஒற்றையாட்சியை நோக்கி இந்த நாடு நகர்த்தப்படுகிறது என்ற அச்சம் நிலவுகிறது.

இந்நிலையில் தான் ஒன்றிய - மாநில உறவுகளை ஆராய உச்சநீதிமன்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு தனது முதல் பாக அறிக்கையை தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இக்குழுவின் அறிக்கையை சட்டமன்றத்தில் சமர்பித்து உரையாற்றிய முதல்வர் கூட்டாட்சி தத்துவத்தை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவரது உரையின் முக்கியப் பகுதியை மீள் பதிவிடுகிறேன்;

“ஒரு மாநிலமாக, நம் மக்கள் காணும் கனவுகளை முழுமையாக நிறைவேற்றும் அளவிற்கு நம்மிடம் அதிகாரங்கள் இல்லை. ஏனென்றால் மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் சமூக ரீதியில், கல்வியில், சுகாதாரத்தில், பொருளாதாரத்தில், உள்கட்டமைப்பு வசதிகளில் முன்னேறி வருகிறோம். நிதி உரிமை உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்காக நாம் இன்னமும் கடுமையாகப் போராட வேண்டிய சூழல்தான் உள்ளது. எனவே எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை நாம் தொடங்கக் கூடிய நாள்தான் இன்றைய (18/02/2026) நாள்” என்று ஒரு இலட்சிய உரையை சட்டமன்றத்தில் பதிவிட்டார் நம் தலைவர் முதல்வர் அவர்கள்.

The Hindu 17/02/26 ஆங்கில நாளிதழில் நடுப்பக்கத்தில் உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை வலியுறுத்தி அருமையான ஓர் கட்டுரையை நம் உயிர்நிகர் தலைவர் முதல்வர் ஸ்டாலின் தீட்டியுள்ளார், மொத்த கட்டுரையும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது, அதிலும் குறிப்பாக இந்த பின் வரும் வரிகள் ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்பின் ஆபத்தை உணர்த்துகிறது; “Centralisation once defended as a necessity, has hardened into habit”

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு விடுகிறோம், ஆனால் அதற்கான அவசியங்கள் அப்படியே உள்ளன என்று கூறியதை இங்கே நினைவு கூறுகிறது இக்கட்டுரை. மாநில சுயாட்சியையும், கூட்டாட்சி தத்துவத்தையும் உள்ளடக்கிய அரசமைப்பு சட்டம் காலத்தின் தேவை என்பதை வலியுறுத்துகிறது முதல்வரின் சிறப்பான கட்டுரை.

பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மரபுரிமை வாரிசான கழகத் தலைவர், முதல்வர் ஸ்டாலின் அவர்கள், கழகத்தின் மூலதாரக் கொள்கையான “மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி” என்ற முழக்கத்துக்கு வலு சேர்க்கும் வகையில் தனது சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளார். மாநில சுயாட்சி என்ற கனல் அணையாமல் காத்து நிற்கிறார் நம் உயிர்நிகர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் நாடி கொள்கையான மத்தியில் கூட்டாட்சி !! மாநிலத்தில் சுயாட்சி !! என்ற முழக்கத்தை மீண்டும் வலியுறுத்தியது முதல்வரின் சட்டமன்ற உரை.

பேரறிஞர் அண்ணாவின் காலத்தினை தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொடர் வலியுறுத்தலையும் தொடர்ந்து, திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் கூட்டாட்சி தத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!!
வெல்க மாநில சுயாட்சிக் கொள்கை.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சியில் கோயம்புத்தூர் சாலை மற்றும் பல்லடம் சாலைகளை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு ”அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் சாலை என்று பெயர் சூட்டப்பட்ட பெயர் பதாகையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில் பாலாஜி, ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே, சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் திருமதி கனிமொழி, நகராட்சித் தலைவர் திருமதி சியாமளா நவநீதகிருஷ்ணன், துணைத் தலைவர் ச.கௌதமன், டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களின் குடும்பத்தினர் ம.மாணிக்கம், கே.நித்தியானந்தன், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

## நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் பங்கேற்பு!

நாமக்கல், பிப். 23–

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணியின் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் – மோகனூர் சாலை, முல்லை நகரில் அமைந்துள்ள கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாநில துணை செயலாளர்கள் நா. இளையராஜா (தாட்கோ தலைவர்), சி.ஆனந்தகுமார், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.விஸ்வநாத் துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், கலைவாணன், ரமேஷ், பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை நடைபெற்றது.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர் பேசும் போது, கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியில் நடைபெற உள்ள மேற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். மேலும் இளைஞர் அணி சந்திப்பு மாநாடு வெற்றிகரமாக அமைய ஒவ்வொருவரும் உறுதி ஏற்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஊராட்சி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து தொண்டனர்.

## சிவகங்கையில் மாமன்னர் மருது பாண்டியர்கள் சிலை திறப்பு விழா!

### அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் – டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு!

சிவகங்கை, பிப். 23 -

சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள் . பெரிய மருது ,சின்ன மருது என்று இவர்கள் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் ஆட்சி புரிந்த சிவகங்கையில் மருது பாண்டியர்கள் சிலை அமைக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது.

10 ஆண்டு அ. தி.மு.க. ஆட்சியில் மருதுபாண்டியர் கள் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் சிலை வைப்பதற்கான முயற்சி ஏதும் இல்லை.

தமிழக முதல்வராக பதவி ஏற்றதும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை நகரில் சிவகங்கை ஆட்சி புரிந்த மாமன்னர் மருதுபாண்டியர்கள் சிலை ருபாய் 1 கோடியே 96 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று உத்தரவிட்டார்.

அதன்படி மா மன்னர் மருதுபாண்டியர்கள் சிலை சிவகங்கை தொண்டி நெடுஞ்சாலையில் சூரக் குளத்தில் ராணி வேலுநாச்சியார் நினைவிடத்தின் அருகில் அமைக்கப்பட்டது.

ரூபாய் ஒரு கோடியே 96 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட மாமன்னர் மருது பாண்டியர்கள் சிலையினை நேற்று முன் தினம் 21ம்தேதி மதுரையில் இருந்து கானொலி வழியாக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சிவகங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி .ராஜா ஆகியோர் மருதுபாண்டியர்கள் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, எம்.எல்.ஏக்கள் திருமதி. தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங்குடி, சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்பு வனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கை மாறன்,

சிவகங்கை கோட்டாட்சியர் திருமதி ஜெசி கிரேபியா, முன்னாள் எம்.எல்.ஏக்கள் .எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ்.குணசேகரன்காளையார் கோவில் தெற்கு , ஒன்றியச் செயலாளர் யோக. கிருஷ்ண குமார், மாவட்டக் கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் மருது, சகாயம், காங்கிரஸ் கட்சி சார்பில் விஜய் தியாகராஜன், சண்முகராஜன், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வேங்கை பிரியா, நகர் மகளிர் அணி மஞ்சுளா ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக் குமார் மற்றும் பல்வேறு சமுதாய அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.




விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் வெல்லும் தமிழ்ப்_பெண்கள் பயிற்சிக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தொகுதி பார்வையாளர் சிவ.ஜெயராஜ், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, வெல்லும் தமிழ் பெண்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் என். கலைச்செல்வி, கே.அமுதா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அருள்மொழி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வெல்லும் தமிழ் பெண்கள் பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.